වාර්ෂික වාර්තාව
ஆண்டு அறிக்கை
ANNUAL REPORT
2020

වැඩිහිටි තැනැත්තන් සඳහා වන
ජාතික සභාව සහ මහලේකම් කාර්යාලය
முதியோர்களுக்கான தேசிய
சபை மற்றும் தேசிய செயலகம்
National Council and Secretariat for Elders

වැඩිහිටි තැනැත්තන් සඳහා වූ ජාතික සභාව
முதியோர்களுக்கான தேசிய சபை
National Council for Elders

සෞඛ්‍ය අමාත්‍යාංශය

சுகாதார அமைச்ச

Ministry Of Health

பொருளடக்கம்

பொருளடக்கம்.....52
முகவுரை 53
நிறைவேற்று அறிக்கை.....54
அறிமுகம் 55
முதியோர்களுக்கான தேசிய செயலகம் 56
தொலை நோக்கு 56
பணிக்கூற்று 56
நிறுவன கட்டமைப்பு 2020 57
முதியோர்களுக்கான தேசிய சபை-2020.....58
முதியோர்களுக்கான தேசிய சபை தவிசாளரின் அறிக்கை-2020.....59
முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் அறிக்கை-2020.....60
2020 ஆம் வருடத்தின் செயற்திறன் அறிக்கை.....68
சுய தொழில் புரியும் முதியோர்களுக்கு நிதி உதவி வழங்குதல் 2020.....68
முதியோர் அடையாள அட்டை வெளியிடுதல் 2020.....69
முதியோர் தாபரிப்பு (ஆவரண கெபகரு) நிகழ்ச்சித் திட்டம். 70
கதிர்காம சுற்றுலா விடுதி வருமானம் மற்றும் செலவு விபரம் 2020.....72
முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை. 73
2020 டிசம்பர் 31 திகதிய நிதி நிலவர அறிக்கை.....**75**
2020 டிசம்பர் 31 திகதிய செயற்திறன் அறிக்கை.....**75**
2020 டிசம்பர் 31 இறுதி வருடத்திற்கான நிறைவேற்று அறிக்கையின் மாற்றங்கள்.....78
2020 டிசம்பர் 31 இறுதி வருடத்திற்கான நிதிப்பாய்ச்சல் அறிக்கை.....79
2020 டிசம்பர் 31 ஆண்டிற்கான நிதி நிலவர அறிக்கையின் குறிப்புக்கள்.....80
கணக்யகாய்வாளர் நாயகத்தின் அறிக்கை 95
கணக்யகாய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பதில்கள் 100

முகவுரை

இலங்கை முதியோரின் சுய கௌரவம், சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு, மற்றும் அபிமானம் உள்ளடங்களாக முதியோர்களின் நலன்புரி மற்றும் உரிமைகளைப் மேம்படுத்துவதற்காக, 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டடின் 05 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

முதியோரின் சுய கௌரவம், சுதந்திரம், பங்களிப்பு, பாதுகாப்புக்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் வினைத்திறனான மற்றும் சேவையொன்றை நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளமை முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் முதன் நிலை சேவையாகும்.

2020 ஆம் ஆண்டின் இலங்கையிலுள்ள முதியோர் சமுதாயத்தின் நலன்புரியினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாட்டு அறிக்கையினை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்வைப்பது 2020 ஆம் வருட அறிக்கையின் நோக்கமாகும்.

நிறைவேற்று அறிக்கை

2020 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை இலங்கை பூராகவும் நடைமுறைப்படுத்தி முதியோர் சமுதாயத்தினரின் நலன்புரி மற்றும் உரிமைகளை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதிலும், இந்த காலகட்டத்தில் நாட்டில் இடம்பெற்றுள்ள கொவிட் தொற்று நோய் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் முன்னேற்றங்களை அடைய முடியவில்லை. இருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் கணிசமான பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றமொன்றை சுவீகரித்துக் கொள்ள முடிந்துள்ளது.

தற்போதைய அரசின் "செழிப்புப் பார்வை" கொள்கை அறிக்கையின் கீழ் 70 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மூத்த பிரஜைகளுக்கு ரூபா. இரண்டாயிரம் வாழ்வாதார உதவியினை வழங்குதல் பிரதானமானது என்பதுடன், நடைமுறையிலுள்ள சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு சுகாதார அமைச்சின் கீழ் கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ பிரதி அமைச்சர்களின் வழிகாட்டல் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர் குழாம் இது தொடர்பில் காட்டிய ஆர்வத்தினை மிகவும் பாராட்டுதல் வேண்டும்.

இதுபோன்று சுகாதார அமைச்சின் செயலாளர் உள்டளடங்களான அலுவலகக் குழாமுக்கும், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் அலுவலகக் குழாமுக்கும், பிரதேச செயலகப் பிரிவுகளில் முதியோர் கடமைகள் தொடர்பில் கடமையினைப் பதிலீடு செய்யும் உத்தியோகத்தர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகும்.

அறிமுகம்

கடந்த பல தசாப்தங்களாக நாட்டில் தொடர்ந்து இடம் பெறும் சமூக, பொருளாதார அபிவிருத்திகளின் விளைவாக சுகாதார, ஊட்டச்சத்து, கல்வி ஆகிய துறைகளில் தென்படும் மேம்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்ட காரணிகளின் விளைவாக பிறப்பு இறப்பு விகிதத்தில் வீழ்ச்சி, எதிர்பார்க்கும் ஆயுட்காலம், முதியோர் சனத்தொகையின் அதிகரிப்பு ஆகியன காணப்படுகின்றன. இதன் பிரகாரம், தற்போதைய 14.6% வீதமாகக் காணப்படும் முதியோர் சனத்தொகை எதிர்கால இரு தசாப்தங்களுக்குள் நாட்டின் முதியோர் சனத்தொகையின் விகிதமானது 21% மாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோரின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கான சேமநல வசதிகளை தரமுயர்த்தல் அவசியமாகும். முதியோரின் உரிமைகளும் கூட பாதுகாக்கப்படல் வேண்டும். இதனை அடைவதற்காக முதியோருக்கான தேசிய செயலகம் உயர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. முதியோர் சமூகத்தை சக்தியூட்ட 2020 ஆம் வருடத்தில் பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கிராமிய முதியோர் குழுக்கள், மாவட்ட முதியோர் சபைகள் ஆகியவற்றைப் பதிவு செய்தல், குறைந்த வருமானம் பெறும் முதியோர்களுக்கு ரூபா. 2,000.00 கொடுப்பனவு வழங்குதல், 100 வயதினைப் பூர்த்தியடைந்த சிரேஷ்ட பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா. 5,000.00 கொடுப்பனவு வழங்குதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பிரதேச மீள் சுழற்சிக் கடன் உதவி முறைமைகள், கண் வில்லைகள் வழங்குதல், செவிப்பறை உபகரணங்கள் வழங்குதல் முதியோர் இல்லங்களை தர நிர்ணயப்படுத்தல், முதியோர்களின் ஆரோக்கிய நன்னிலையினை மேம்படுத்துதலுக்காக குறைந்த பட்ச வசதிகளுடனான மலசல கூட வசதிகளை வழங்குதல் போன்ற இவ்வாறான செயற்திட்டங்கள் முதியோர் சமூக பாதுகாப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் முதியோர்களின் மனோநிலை மற்றும் ஆன்மீக விருத்திகளை மேம்படுத்த உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், முதியோர் பராமரிப்பாளர்களைப் பயிற்றுவித்தல் என்பன எம்மால் முன்னுரிமைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் சிலவாகும்.

அதனூடாக முதியோர் தனிமையில் வாழ்ந்து வருவதைத் தடுப்பதும் சமூகத்தில் அவர்களின் பங்குபற்றலை மேம்படுத்தலும், உடலியல், உளவியல் மற்றும் ஆன்மீக விருத்தியினை ஏற்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் எங்கள் நோக்கமாகும்.

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் முதியோர்களுக்கான தேசிய செயலகமும், முதியோர்களுக்கான தேசிய சபையும்; நிறுவப்பட்டுள்ளன.


தொலை நோக்கு

இலங்கை மக்களை வினைத்திறன் மிக்கதும்
சக்தி வாய்ந்ததுமான வயோதிபமடைதலை
நோக்கிக் கொண்டு செல்லுதல்


பணிக்கூற்று

"முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு,
கௌரவத்தினை உறுதிப்படுத்துதல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில்
முதியோர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை புரிய வைத்தல்
மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக
முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது
எமது பணியாகும்"

நிறுவனக் கட்டமைப்பு 2020



முதியோர்களுக்கான தேசிய சபை-2020



பெயர்	பதவி
1. வைத்தியர் எம்.எச்.முனசிங்ஹ	தலைவர்
2. டீ.எல். யூ.பீரிஸ்	உப தலைவர்
3. திரு.சந்தனரணவீர ஆரச்சி	செயலாளர்
4. திரு.சந்தனரணவீர ஆரச்சி	சபை உறுப்பினர்
5. பேராசிரியர். அஜித் கலாஷன அமரசிங்ஹ	சபை உறுப்பினர்
6. பேராசிரியர். பத்மா குணரத்தன	சபை உறுப்பினர்
7. பேராசிரியர். கொன்கஸ்தென்ன ஆனந்த தேதர்	சபை உறுப்பினர்
8. திரு.சமந்த லியனவடுகே	சபை உறுப்பினர்
9. திரு.ஜீ.வீ.ஏ.டி.சில்வா	சபை உறுப்பினர்
10. திரு. டீ.எம்.ஜே.சுமேத	சபை உறுப்பினர்
11. லுதினல் கர்ணல் எஸ்.எம். சீ. சுனில் சிறிவர்தன	சபை உறுப்பினர்
12. திரு. என்.டி. அமரதுங்க	சபை உறுப்பினர்
13. திரு.மஹிந்த மடிகேவா	சபை உறுப்பினர்
14. சிரேஷ்ட பேராசிரயிர். எல்.திசாநாயக்க	சபை உறுப்பினர்
15. திருமதி. எச்.வஜீர சிறி ஸ்வர்ண பண்டார	சபை உறுப்பினர்
16. திரு. ஏ.டீ.ஆர்.ஏ.டப்லியூ.ஞானசிறி	சபை உறுப்பினர்

முதியோர்களுக்கான தேசிய சபையின் தவிசாளர் அவர்களின் அறிக்கை - 2020

தற்போது முதியோர் சனத்தொகை வளர்ச்சி, சமூகப் பிரச்சினையொன்றாக வளர்ந்துவிட்டது. நாளுக்கு நாள் துரிதகதியில் முதியோர் சனத்தொகை உயர்வடைந்து காணப்படுதல் எதிர்காலத்திற்குப் பிரச்சினையொன்றாக இல்லாதவாறு, முதியோர் சமுதாயத்தின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்கென திட்டங்களைத் திட்டமிடும் பிரதான பொறுப்பு எமது அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணியினை நிறைவேற்றுவதற்கு "2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் மூலம்" கிடைக்கப் பெற்ற அதிகாரங்களின் பிரகாரம் முதியோர்களுக்கான தேசிய சபை, அது தொடர்பில் கொள்கைசார் தீர்மானத்தினை எடுத்தல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம், அச்செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோயர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அமுலாக்கப்படுவதுடன், 2019 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டுவரும் "முதியோர் நலன்புரி தொடர்பிலான தேசிய நிதியத்தின்" ஊடாக முதியோர் நலன்புரிச் சேவைகளை மிகவும் பரந்த முறையில் சாதகமான பெறுபேறுகளை எதிர்பார்த்து விரிவுபடுத்துவதற்கு ஆரம்பித்துள்ளோம்.

இப் பொறுப்பினை நிறைவேற்றுவதில் பிரதான பொறுப்பினை வகிக்கும் முதியோர்களுக்கான தேசிய சபை, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் உள்ளடங்களாக, ஊழியப் படையினர் அர்ப்பணிப்புடன் செய்யும் பணி பாராட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், பிற பிரத்தியேக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள், தமது நேரம், முதியோர் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கென அர்ப்பணிப்புடன் செய்யப்படும் பணியினை பாராட்டுவதுடன், எனது நன்றியினை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனினும், இன்றளவில் இலங்கையில் 3 மில்லியனுக்கும் அதிகமான முதியோர் சனத்தொகையினரின் நலன்புரி மற்றும் பாதுகாப்பினை இவ்வாறான நிறுவனத்திற்கு வரையறை செய்து நிறைவேற்றுதல் பாரிய சவாலானதாகும் என்பதுடன், கஸ்டமான செயற்பாடு என்பதால், பொல பொருளாதார உறுதிப்பாட்டுடனான குடும்ப அடிப்படை மையமான ஒட்டு மொத்த சமூகத்தினால் துரித கதியில் அதிகரிக்கும் முதியோர் சனத்தொகையின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்கு அர்ப்பணித்துள்ள முதியோர்களுக்கு பாதுகாப்பான நாளைய தினமொன்றினை முன்னிட்டு செயற்படுவதற்கு காலம் கனிந்துள்ளது என்பதை நான் நன்கு உணர்கின்றேன்.

வைத்தியர்.எஸ்.எச்.முனசிங்ஹ
செயலாளர்
சுகாதார அமைச்சு
தலைவர்
முதியோர்களுக்கான தேசிய சபை

முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளரின் அறிக்கை - 2020

முதியோர்களுக்கான தேசிய சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் நிச்சயிக்கப்பட்ட வழிமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டில் அடைந்துள்ள செயற்திறன் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த வருடத்திற்குள் நாட்டில் இடமபெற்றுள்ள கொரோனா (Covid) தொற்று நிலமையின் காரணமாக குறிப்பிடத்தக்க செயல்திறன்களை அடைய முடிந்தது.

சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவு

- **70 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கான ரூபா 2000/- கொடுப்பனவு**

பெருமை வாய்ந்த மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு, முதியோரின் நலனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு மரியாதைக்குரிய மற்றும் ஆதரவான கையை வழங்க வேண்டும் என்பதற்காக. 70 வயதினைப் பூர்த்தி செய்த மூத்த பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா. 2,000.00 கொடுப்பனவுக்காக 2020 ஆம் வருடத்தின் பொருட்டு ரூபா 10,000 மில்லியன் நிதியின் மூலமாக பயனாளிகளான பிரஜைகள் 416,667 பேர்களுக்கு நிதி வழங்கும் பொருட்டு ரூபா. 9.868 மில்லியன் நிதி முன்னேற்றம் வருடத்திற்குள் கிடைக்கப்பெற்றுள்ளது.

- **100 வயதினைப் பூர்த்தியடைந்த சிரேஷ்ட பிரஜைகளுக்கான ரூபா. 5,000.00 கொடுப்பனவு.**

100 வயதினைப் பூர்த்தியடைந்த சிரேஷ்ட பிரஜைகள் நாட்டின் முக்கியமான குழுவாகக் கருதவேண்டியுள்ளது. 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் ஒரு நாட்டின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கக் கூடியதும். ஒரு தேசத்தை நிறுவுவதற்கான ஒரு அளவுகோலாகக் கருதலாம், ஒரு புறம் இது தேசியப் பெருமைக்குரிய விடயமாகும். இதனடிப்படையில் 100 வயதினைப் பூர்த்தியடைந்த சகல முதியோர்களுக்காகவும், மாதாந்தம் ரூபா. 5,000.00 கொடுப்பனவு வழங்குவதற்காக 2020 ஆம் வருடத்திற்குள் ரூபா. 24 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, பயனாளிகளான சிரேஷ்ட பிரஜைகள் 400 பேர்களுக்கு கொடுப்பனவு வழங்குதற்காக ரூபா. 20 மில்லியன் நிதி முன்னேற்றம் கிடைக்கப் பெற்றுள்ளது.

திறைசேரி நிதியினூடாக செயல்படுத்தப்படும் முதியோர் நலன்புரி செயற்திட்டங்கள்.

01. கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டுதல்.

சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் சகல கிராம அலுவலகர் பிரிவுகளிலும், பிரதேச செயலகப் பிரிவுகளிலும், மாவட்ட, மற்றும் மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ள முதியோர் சங்கங்களுக்கு நிதி பங்களிப்பு வழங்குவதோடு, அவர்களை கண்காணிப்பதனூடாக இச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்பொருட்டு 2020 ஆம் வருடத்திற்குள் ரூபா. 0.930 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்தோடு, 2020.12.31 ஆம் திகதியளவில் ரூபா. 0.928 மில்லியன் நிதி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

02. பயிற்சி ஆய்வு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.

"குழந்தைகளின் உலகம் - முதியோர்கள்" முதியோர்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். இதனூடாக பிள்ளைகள் மற்றும் முதியோர்களுக்கிடையில் ஆளிடைத் தொடர்பினை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சியின் கீழ் 2020 ஆம் வருடத்திற்குள் பாடசாலை மாணவர்கள் 300 பேர்களுக்கான 02 நிகழ்ச்சிகள் மாத்திரம் வருடத்திற்குள் நடாத்தப்பட்டுள்ளன.

03. முதியோர்களுக்கு அடையாள அட்டை விநியோகம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கு அரசாங்க விதிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட உயர் தரமான மற்றும் தரமான அடையாள அட்டையை வழங்குதல் இதனூடாக மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக 2020 ஆம் ஆண்டிற்குள் ரூபா. 1.654 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, வருடத்திற்குள் புதிய அடையாள அட்டைகள் 62,279 விநியோகிப்பதற்காக ரூபா. 1.606 மில்லியன் நிதி முன்னேற்றம் கிடைக்கப் பெற்றுள்ளது.

04. முதியோர்களுக்கு மிகவும் சிறந்த வசதிகளை வழங்கும் பொருட்டு முதியோர் இல்லங்களை பரிபாலனம் செய்தல், நிதி உதவி வழங்குதல் மற்றும் முதியோர் இல்லங்களை கண்காணிப்புச் செய்தலும்

நாடு பூராகவும் அமைந்நதுள்ள 306 முதியோர் இல்லங்களிலும் பராமரிக்கப்படும் முதியோர்கள் தங்களது வயதான காலத்தில் அர்த்தமுள்ளதாகவும், மகிழ்ச்சியாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் பிரயோசனமாகவும் கழிப்பதற்கு நாடு பூராகவுமுள்ள ஒவ்வொரு முதியோர் இல்லங்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக செய்யப்படும் சிறிய அளவிலான (செலவு) அத்தியவசிய கோரிக்கைகளின் அடிப்படையில் புதுப்பித்தல், உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசியங்களுக்கான உதவிகள் இதனூடாக வழங்கப்படுகின்றது.

மேலும் இலங்கை முழுவதும் தற்போதுள்ள அரச மற்றும் தனியார் துறை முதியோர் இல்லங்களின் நிலைமைகள், ஏற்கனவே உள்ள முறைகேடுகள் மற்றும் வசிப்பிட முதியோர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதன் மூலம் முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோர்களுக்கு நல்ல மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் நிர்வகிக்கப்படும் கதிர்காமம் அரச முதியோர் இல்லம் மற்றும் மாளிகாதென்ன எவ்ஜின் நோனா முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செலவுகள், தொடர் செலவுகள் மற்றும் அத்தியாவசிய பராமரிப்புச் செலவுகளை இதனால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா. 2.413 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு ரூபா. 2.187 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

05. வெளியீடுகள்

முதியோர் தினத்தினை முன்னிட்டு விளம்பர நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளது, சஞ்சிகை வெளியீடுகளுக்காகவும், வருடாந்த அறிக்கை அச்சிடுதல், ஊடகம் மற்றும் விளம்பர நடவடிக்கைகளுக்காக வேண்டி இவ்வருடத்திற்குள் ரூபா. 1.2 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு 2020 ஆம் வருடத்தின் பொருட்டு ரூபா. 1.182 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

06. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.

இதன் கீழ் மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களுக்கான கூட்டம் 02, பிரதேச முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களுக்கான கூட்டம் 01 , மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்-04 உம் நடாத்தப்பட்டுள்ளது. 2020 ஆம் வருடம் ஒதுக்கப்பட்ட ரூபா. 0.6 மில்லியனில் ரூபா. 0.596 மில்லியன் நிதி முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

07. முதியோர்களுக்கான தேசிய சபை

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தினால் முதியோர்களுக்கான தேசிய சபை தாபிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் வருடத்திற்குள் அமர்வுகள் 05 நடாத்தப்பட்டுள்ளதோடு, இதன் பொருட்டு வருடத்திற்குள் ரூபா. 1.0 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் ரூபா. 0.795 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

08. முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை

2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தின் மீள் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 24 ஆம் பிரிவின் தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை, 5 உறுப்பினர்களைக் கொண்ட நீதித் துறை சேவை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட நீதித் துறை அதிகாரங்களைக் கொண்ட நிறுவனமாகும். இதில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமை தாங்குகின்றார். வருடத்திற்குள் சபையின் அமர்வு 24 இடம் பெற்றுள்ளது. இதற்காக ரூபா. 1.27 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, ரூபா. 1.247 மில்லியன் நிதி முன்னேற்றம் இடம்பெற்றுள்ளது.

09. ரூபா. 2,000/= முதியோர் கொடுப்பனவிற்கான நிர்வாக செலவீனங்கள்.

70 வயதினைப் பூர்த்தியடைந்த குறைந்த வருமானம் பெரும் முதியோர்களுக்கு வழங்கப்பட்ட முதியோர் கொடுப்பனவு மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கடமைகளின் நடவடிக்கைகளுக்கான அவசியமான காகிதாதிகள் கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவுக்குறித்தான சான்றிதழ், லெஜர் (பதிவேடுகள்) அச்சிடுவதற்கான நிதி வழங்குதல் இதன் கீழ் இடம் பெற்றுள்ளன. இதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் ரூபா. 4.10 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, ரூபா. 3.90 மில்லியன் நிதி முன்னேற்றமும் இடம்பெற்றுள்ளது.

10. ஏனைய செலவுகள்.

முதியோர் நலன்புரி நிகழ்ச்சிகளுக்கு இணையாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் அரச மட்டத்தில் கிடைக்கபடப்பெற்ற பல நிகழ்ச்சிகளை ஏற்பாடுகள் இதனூடாக இடம்பெற்றுள்ளன. (உதா. என்டர்பிறைசஸ் சிறிலங்கா நிகழ்ச்சி, நாட்டுக்காக ஒன்றிணைவோம்,) இவற்றிற்காக 2020 ஆம் வருடத்திற்குள் ரூபா. 0.1 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, ரூபா. 0.052 மில்லியன் நிதி முன்னேற்றம் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

11. முதியோர்களுக்கான சுய தொழில் நிதி உதவி வழங்குதல்.

சுய-படைப்புத் திறன்கள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக முதியோர் பரம்பரையினரை வலுவூட்டுவதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு ரூபா. 30,000 அதிக பட்சத் தொகையின் கீழ் சுய தொழில் உதவி வழங்கப்பட்டது. இதன்படி 2020 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா. 11.950 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் முதியோர் சுய தொழில் பயனாளிகள் 322 பேர்களுக்கு நிதி உதவி வழங்கியதன் மூலம் ரூபா. 11.829 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

12. சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம்.

நோய்த் தொற்றுப் பேரிடையே முதியோர்களின் - சவால்கள் " எனும் தொனிப் பொருளின் கீழ் 2020 ஆம் ஆண்டு முதியோர் தின நிகழ்வு பொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் 350 முதியோர்களின் பங்குபற்றலுடன் இடம் பெற்றது. இதற்கு இணையாக ஊடக நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை, 75 வயதினைப் பூர்த்தியடைந்த அதிக பிள்ளைகளுடன் வாழும் பெற்றோர்களை கௌரவித்தல் மற்றும் 100 வயதினைப் பூர்த்தியடைந்த தாய், தந்தையினை கௌரவித்தல் சிரேஷ்ட தடகள வீரர்களுக்கான அனுசரனை நிகழ்ச்சிகள் உள்ளடங்களான தேசிய நிகழ்விற்காக ரூபா. 2.39 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு மொத்தமாக ரூபா. 2.320 மில்லியன் நிதி முன்னேற்றம் அடைந்துள்ளது.

13. புற்று நோய் உதவித் திட்டம்

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 60 வதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உலர் உணவு வழங்கும் நிகழ்ச்சி 01 இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020 ஆம் வருடத்திற்காக ரூபா. 0.444 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதோடு இதற்காக ரூபா. 0.442 மில்லியன் நிதி முன்னேற்றம் அடைந்துள்ளது.

14. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கலந்துரையாடல்

2020 ஆம் வருடத்திற்குள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கலந்துரையாடல் 02 நடாத்தப்பட்டுள்ளதோடு, இதற்காக அனுமதியளிக்கப்பட்ட ரூபா. 0.065 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபா. 0.064 மில்லியன் செலவு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக பாதுகாப்பு நிதியினூடாக நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டம்.

01. முதியோர் இல்லங்களைத் தரப்படுத்தல், பதிவு செய்தல் மற்றும் தற்போது செயற்பட்டுவரும் முதியோர் இல்லங்களை புதிதாக நிர்மாணித்தல் மற்றும் புனர்நிர்மானம் செய்யும் பொருட்டு இடம்பெறும் கோரிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடு வழங்குதல்.

சகல முதியோர் இல்லங்களும் இலங்கை தர நிர்ணயம் 1506:2015 / முதியோர் இல்லங்கள் தொடர்பிலான இலங்கை தர நிர்ணயம், இலங்கை தர நிர்ணய நிருவனத்தின் தரப்படுத்தலில் உள்ளடங்கப்பட்டுள்ளவாறு தர நிர்ணயப்படுத்தல். இலங்கை பூராகவும் செயற்பட்டுவரும் 50 முதியோர் இல்லங்களையும் புனர்நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்கள் வழங்கும் பொருட்டு ரூபா. 02 மில்லியன் நிதி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இதில் ஒரு முதியோர் இல்லத்திற்கென ரூபா. 2 மில்லியன் அதிகபட்ச தொகையின் கீழ் நிதி வழங்கப்படும். மேற்கூறப்பட்ட தர நிர்ணயத்திற்கு ஏற்ப ஒவ்வொரு முதியோர் இல்லமும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வகையில் தேவையான பௌதீக வளங்களான கட்டட நிர்மாணத்திற்கென இந்த நிதி பயன்படுத்தப்படும். பிரதேச செயலாளர்களினால் சம்பந்தப்பட்ட அதிகார எல்லைக்குள் பராமரிக்கப்படும் முதியோர் இல்லங்களைத் தரப்படுத்தலுக்காக விண்ணப்பங்கள் கோரப்படும் அதேவேளை, இதற்குறித்தான தகுதியான மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதியோர் இல்லங்களுக்காக நிதி (நிதி நிபந்தனைகள் உட்பட) வழங்கப்படும். இந்த நோக்கத்திற்காக 2020 ஆம் ஆண்டிற்குள் ரூபா. 100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, வருடத்திற்குள் ரூபா. 4.00 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது

முதியோர் இல்லங்களைப் பிரதானப்படுத்தி சுகாதார வசதிகள் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்படும் முதியோர்களுக்கு சுகாதார உடற்பயிற்சி திட்டங்கள், பொருத்தமான உணவு விழிப்புணர்வு திட்டங்கள், ஆலோசனை நிகழ்ச்சிகள் மற்றும் முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோருக்கான மத மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகள், மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதியோர் இல்லங்கள் 61 இற்கென ரூபா. 15,000/= அதிக பட்சத் தொகையின் கீழ் நிதி வழங்குதல் இடம் பெற்றுள்ளது. இதன் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் ரூபா. 1.00 மில்லியன் வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, வருடத்திற்குள் ரூபா. 0.907 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

02. கண்வில்லைகள் மற்றும் செவிப்பறை உபகரணங்கள் வழங்குதல்

கற்புலண் மற்றும் செவிப்புலண் தொடர்பான விசேட தேவையுடைய முதியோர்களுக்கு கண் வில்லைகள் மற்றும் செவிப்பறை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இதில் இடம்பெறும். இதன் பொருட்டு வருடத்திற்குள் ரூபா. 15.50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, ரூபா. 0.190 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளதோடு, வருடத்திற்குள் செவிப்பறை உபகரணங்கள் 295 வழங்கப்பட்டுள்ளன.

03. முதியோர்களுக்கான மருத்துவ முகாம் நடாத்துதல்.

இந்த வருடத்திற்குள் வைத்திய முகாம்கள் கேகாலை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, மொனராகலை போன்ற மாவட்டங்களை உள்ளடக்கி இந் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டுள்ளதோடு, இதன் நிமித்தம் 2020 ஆம் ஆண்டிற்கென ரூபா. 66.20 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, ரூபா. 0.898 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

04. முதியோர் பகல்நேர நிலையத்திற்கான நிதி உதவி வழங்குதல்.

முதியோர் பகல்நேர நிலையத்திற்குத் தேவையான உபகரணங்கள், (மேசை, அலுமாரி உள்ளடங்களான வேறு) மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிய கட்டட நிர்மாணம் (அதிக பட்சம் ரூபா. 2.5 மில்லியன்) கோரிக்கைகளுக்கமைவாக இந் நிதி உதவி இடம் பெறும். இதற்காக வருட இறுதிக்குள் ரூபா. 175 மில்லியன் நிதி ஒதுக்கீடு இடம்பெற்றதோடு, புதிதாக முதியோர் பகல்நேர நிலையங்கள் 26 இனை நிர்மாணிப்பதற்காகவும் மற்றும் ஒரு பகல் நேர நிலையம் தொடர்பில் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு ரூபா. 57.56 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

05. பிரதேச மீள் சுழற்சிக் கடன் நிகழ்ச்சித் திட்டம்

முதியோர்களை சுறு சுறுப்பானவர்களாக சீர்படுத்துவதற்கும், பொருளாதார ரீதியில் சக்தி மிக்க நபர்களாக்குவதன் மூலம் அவர்களை பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாச்சார பின்னணியில் சுய மரியாதையுடன் வாழ்வதற்கு உகந்த சூழலை உருவாக்கும் நோக்கத்துடன், பிரதேச மீள் சுழற்சிக் கடன் நிகழ்ச்சித் திட்டம் பிரதேச முதியோர் அமைப்புக்களைப் பயன்படுத்தி கடன் நிதி திட்டம் கட்டியெழுப்பப் படுகின்றது. இதன் பொருட்டு 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா. 1.00 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மாத்திரம் இடம்பெற்றுள்ளது.

06. கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டுதல்.

கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டுதலின் கீழ் முதியோர் இல்லங்களை சக்தியூட்டும் பொருட்டு, முதியோர் சங்கங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கிராமிய சங்கங்களுகென (ரூபா. ஒரு இலட்சம் அதிக பட்ச நிதியின் கீழ்) நிதி பங்களிப்பை வழங்கி வைத்தல் இடம் பெறுகின்றது. இதனடிப்படையில் 2020 ஆம் வருடத்திற்கென 135 முதியோர் சங்கங்களுக்கு உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆம் வருடத்தில் இதற்காக ரூபா. 20.00 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, ரூபா. 13.25 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

07. **முதியோர்கள் தங்கள் வீட்டுக்குள் வாழ்வதற்கு அவசியமான குறைந்த பட்ச மற்றும் மலசல கூட வசதிகளை வழங்குதல்.**

60 வயதினைப் பூர்த்தியடைந்த முதியோர்கள் வாழ்வதற்குத் தேவையான அவசியமான குறைந்த பட்ச வசதிகள் மற்றும் மலசல கூட வசதிகள் (கொமட், கட்டில் மெத்தை, கைப்பிடி மற்றும் வீட்டினை புனர் நிர்மாணம் செய்தல்) வழங்குவதன் பொருட்டு கோரிக்கைகளுக்கமைவாக ஒரு பிரதேச செயலகத்திற்கென ரூபா. 0.3 மில்லியன் அதிக பட்சத் தொகையின் கீழ் 230 பிரதேச செயலகங்கள் 1800 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆம் வருடத்திற்கென ரூபா. 99.30 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா. 53.011 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

08. **மாவட்ட மீளாய்வுக் கூட்டம் நடாத்துதல்.**

மாவட்ட மட்டங்களில் முதியோர் கடமைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நடாத்துவதற்கு வருடம் ஒன்றிற்கு ஒரு தடவை கோரிக்கைக்கு அமைவாக ரூபா. 50,000/- எனும் அடிப்படையில் வழங்கப்படும். 2020 ஆம் வருடத்தின் 6 மாதங்களுக்காக ரூபா. 25,000/- எனும் அடிப்படையில் 25 மாவட்டங்களிற்கும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதோடு, முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 15 இடம்பெற்றுள்ளது. இதன் பொருட்டு வருடத்திற்குள் ரூபா. 1.25 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில், ரூபா. 0.789 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

09. **நிர்வாக செலவு**

சமூக பாதுகாப்பு நிதியின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களிற்கான நிர்வாக செலவினங்கள் உள்ளடங்கப்படுகின்றன. இதன் பொருட்டு 2020 ஆம் வருடத்திற்கென ரூபா. 5.00 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் வருடத்திற்குள் ரூபா. 1.200 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

10. **பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.**

பிரதேச செயலக மட்டங்களில் மற்றும் மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தோட்டம், சிற்றுண்டி உற்பத்தி, குடிபானம் தொடர்பான அலங்காரப் பொருள் உற்பத்தி, மிளகாய்த் தூள் வகைகள் உற்பத்தி, கொச்சி தோட்டச் செய்கை, அலங்கார மலர் வளர்ப்பு, விவசாய நாற்று நடுகைச் செய்கை, இசைக் கருவி தயாரிப்புத் திட்டங்களுக்காக 2020 ஆம் வருடம் ரூபா. 1.00 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதி முன்னேற்றம் எதுவும் இடம்பெறவில்லை.

11. **பன்னல வெல்கம் முதியோர் இல்லத்தினது பரிபாலன நடவடிக்கைகள்.**

பன்னல வெல்கம் முதியோர் இல்லத்தின் நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் பிற நடவடிக்கைகளுக்காக முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் 2020 ஆம் வருடத்தின் பொருட்டு ரூபா. 27.50 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, வருடத்திற்காக ரூபா. 6.106 நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

12. முதியோர் சுற்றுலா ஏற்பாடுகள்.

முதியோர் அமைப்புக்களுக்காக வருடாந்த ஆத்மீக சுற்றுலாவுக்காக ரூபா. 50,000/- அதிக பட்சத் தொகையின் கீழ் சுற்றுலா 18 ற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆம் வருடத்திற்காக ரூபா. 2.50 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, வருடத்திற்குள் ரூபா 0.894 மில்லியன் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

13. கதிர்காமம் புதிய முதியோர் இல்ல நிர்மாணம்

கதிர்காமம் புதிய முதியோர் இல்ல நிர்மாணத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளுக்காக வருடத்திற்குள் ரூபா. 0.0515 நிதி செய்யப்பட்டுள்ளது. கதிர்காமம் முதியோர் இல்ல நிர்மாணம் செய்தல், தங்கல்ல யாயவத்த இடைத்தங்கள் நிலைய நிர்மாணம், கொழும்பு இடைத்தங்கள் நிலைய நிர்மாணங்களுக்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா. 550.00 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

14. **"சுரக்கும்" சுய தொழில் திட்டமுன்மொழிவு**

இதன் கீழ் முதியோர் பகல்நேர நிலையங்களை மையப்படுத்தி வருமானம் திரட்டும் நிகழ்ச்சி ஒன்றாக இடம்பெறும். தனி நபர்களாலோ அல்லது குழுவினராலோ சுய தொழில் ஒன்று இடமபெறுமாயின் இதன்பொருட்டு அதிக பட்சத் தொகையாக ரூபா. 50,000 தொகையின் கீழ் நிதி உதவி வழங்கப்டும். இதன் பொருட்டு 2020 ஆம் வருடத்திற்குள் ரூபா. 3.00 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு எந்வித நிதி முன்னேற்றமும் இடம்பெறவில்லை.

15. ஆரோக்கிய மருத்துவ நிகழ்ச்சி

2020 ஆம் வருட ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சியின் கீழ் புற்றுநோய், சிறுநீரகநோய், பாரிச வாதம் போன்ற நோய்களுக்காக ஒருவருக்கு ஒரு தடவை மாத்திரம் ரூபா. 25,000/- நிதி உதவி வழங்கப்படும். 60 வயதினைப் பூர்த்தியடைந்திருப்பது கட்டாயம் என்பதோடு, மருத்துவ பரிசோதனை , மருந்துவில்லைகளை கொள்வனவு செய்தல், போக்குவரத்து வசதிகளுக்காக இந் நிதி வழங்கி வைக்கப்படும். 2020 ஆம் ஆண்டில் 186 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக ரூபா. 4.975 மில்லியன் நிதி முன்னேற்றம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, இதற்காக ரூபா. 4.95 நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

சந்தன ரணவீர ஆரச்சி
சமூக சேவைகள் பணிப்பாளர்,
(ப.க) முதியோர்களுக்கான தேசிய செயலகம்.

2020 ஆம் வருடத்தின் செயற்திறன் அறிக்கை

சுய தொழில் புரியும் முதியோர்களுக்கு நிதி உதவி வழங்குதல் -2020

மாகாணம்	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
மேல் மாகாணம்	களுத்துறை	11
	கொழும்பு	05
	கம்பஹா	13
மத்திய மாகாணம்	மாத்தளை	08
	கண்டி	08
	நுவரெலியா	01
தென் மாகாணம்	காலி	10
	மாத்தறை	10
	ஹம்பாந்தோட்டை	06
கிழக்கு மாகாணம்	மட்டக்களப்பு	20
	அம்பாறை	19
	திருகோணமலை	04
வடமேல் மாகாணம்	குருநாகல்	40
	புத்தளம்	13
வட மத்திய மாகாணம்	அனுராதபுரம்	11
	பொலனறுவை	03
ஊவா மாகாணம்	பதுளை	09
	மொனராகலை	31
சப்ரகமுவ மாகாணம்	இரத்தினபுரி	20
	கேகாலை	47
வட மாகாணம்	மன்னார்	--
	முல்லைத்தீவு	09
	வவுனியா	02
	யாழ்ப்பாணம்	18
	கிளிநொச்சி	04
மொத்தம்		**322**

முதியோர் அடையாள அட்டைகள் விநியோம் - 2020

மாகாணம்	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
மேல் மாகாணம்	களுத்துறை	3215
	கொழும்பு	5234
	கம்பஹா	6100
மத்திய மாகாணம்	மாத்தளை	850
	கண்டி	4241
	நுவரெலியா	2025
தென் மாகாணம்	காலி	4562
	மாத்தறை	3189
	ஹம்பாந்தோட்டை	1774
கிழக்கு மாகாணம்	மட்டக்களப்பு	2155
	அம்பாறை	2345
	திருகோணமலை	1201
வடமேல் மாகாணம்	குருநாகல்	4318
	புத்தளம்	2400
வட மத்திய மாகாணம்	அனுராதபுரம்	1982
	பொலனறுவை	1454
ஊவா மாகாணம்	பதுளை	739
	மொனராகலை	1028
சப்ரகமுவ மாகாணம்	இரத்தினபுரி	2672
	கேகாலை	5386
வட மாகாணம்	மன்னார்	377
	முல்லைத்தீவு	215
	வவுனியா	578
	யாழ்ப்பாணம்	1202
	கிளிநொச்சி	303
மொத்தம்		59545
பிரதான காரியாலயத்தினூடாக நடமாடும் சேவையில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை		2734
வழங்கப்பட்ட மொத்த அடையாள அட்டைகளின் எண்ணிக்கை		62279

முதியோர் தாபரிப்புத் திட்டம்
முதியோர் ஆவரண கெபகரு நிகழ்ச்சித் திட்டம்

முதியோர்களுக்கான தேசிய சபையின் பிரேரணையின் பிரகாரம்; உதவியற்ற மிகவும் வறிய நிலையிலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உதவும் நோக்கில் இந்த முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித் திட்டம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு எந்தவொரு நபருக்கும் பணம் நன்கொடையாக வழங்க முடியும் என்பதுடன் அவ்வாறு நன்கொடையாளர் மூலம் வழங்கப்படுகின்ற பணம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மிகவும் வறிய உதவியற்ற முதியோர்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 250/- தொகயோ, மாதம் ஒன்றுக்கு ரூபா 500/- எனும் அடிப்படையில் நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படும்போது 04 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பயனாளிக்கு ரூபா 1000/- தொகயோ ரூபா. 2000/- எனும் அடிப்படையில் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதோடு, பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக பயனாளிக்கு பணம் வழங்குதல் இடம்பெறும்.

பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள எமது உத்தியோகத்தர் (முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்/சமூக சேவை உத்தியோகத்தர்) ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை பயனாளிகள் பற்றிய தகவல்கள் ஆராயப்படுவதுடன் பயனாளிகளுக்குப் பணம் வழங்கும் போது பணம் வழங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்கொடையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

அவ்வாறு இந்த நிகழ்சித் திட்டத்தின் கீழ் உதவி வழங்கும் போது விருப்பமான ஒருவரை அல்லது சிலரை அல்லது தாம் விரும்பும் பிரதேசத்திலுள்ள ஒருவரை அல்லது சிலரை நன்கொடையாளர்களினால் தேர்ந்தெடுக்க முடியும். அவ்வாறு இல்லையென்றால் அந்த தேர்வு இந்த அலுவலகத்தின் மூலம் செய்யப்படுவதுடன் பயனாளியின் பெயர், விலாசம், உள்ளடங்களான தகவல்கள் நன்கொடையாளருக்கு வழங்குவதற்கு எமது அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காகு பங்களிப்பு வழங்க விரும்பும் நபர்கள் பத்தரமுல்லை, இலங்கை வங்கிக் கிளையில் இல. 228075 ஐ கொண்ட "முதியோர் நலன்புரி தொடர்பிலான தேசிய நிதியம்" கணக்கிற்கு உங்கள் நன்கொடைகளை வைப்பிலிட முடியும் என்பதுடன் அவ்வாறு வைப்பிலிடும் பொழுது பணம் வைப்பிலிட்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எமக்கு வழங்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் எமது அலுவலகத்திற்கு நேரில் வந்து உங்களின் பணத்தை நன்கொடையாக வழங்க முடியும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் உதவியற்ற முதியோர்களுக்காக செய்யப்படும் மிகப்பெரும் தர்மமாகும். ஆகையினால் அதை மென்மேலும் விரிவுபடுத்தி முதியோர்கள் பலருக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம் சேவைகளை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின்போது முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சியின் நன்கொடையாளர்கள்,பயனாளிகள் மற்றும் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் இல	பங்களிப்பாளர்களின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை	பயனாளிகளின் பெயர்	பிரதேச செயலகம்
1.	திருமதி. டப்லிவ்.எம்.வத்சலா	01	திருமதி. எம்.ஜி.வயலட்	தமுத்தேகம
2.	கணக்கு	01	திருமதி.டப்ளிவ்.ஜி.குணவதி	குண்டகசாலை
3.		01	திருமதி.டி.டப்ளிவ்.ஜி. அங்கோ	மாவனல்லை
4.		01	திருமதி.பி. டி.ஜென் நோனா	ரிதிகம
5.		01	திருமதி.டி.எம்.டிங்கிரி அம்மா	மாஸ்பொத
6.		02	இதுரகே நந்தனிலக	மினுவாங்கொட
7.			எம்.கே.ஏ.சோமா குணவர்த்தன	மினுவாங்கொட
8.		01	எம்.நோபட் விமலரத்ன	கெஸ்பேவ
9.		01	ஐ.என்சி நோனா	களனி
10.		01	திருமதி.ஈ.பியசீலி	கடுவல
11.		03	ஈ.ஏ.கேமபால பெரேரா	மஹரகம
12.			திருமதி.லீலாவதி வீரசிங்ஹ	மஹரகம
13.			எம்.ஏ.கேமலதா பெரேரா	மஹரகம
14.		01	எச்.எம்.ஹேரத் மெனிக்கே	இப்பாகமுவ
15.		01	ஏ.பி. தர்மவர்த்தன	தெரனியகல
16.		01	ஜெ.பி.லெயிசா	வரகாபொல
17.		03	வர்னபுலிகே நன்ததாச	சீதாவாக்க
18.			திருமதி. பஸ்வென்னகே பிரதிலதா	சீதாவாக்க
19.			திரு. எச். குசும் பெரேரா	சீதாவாக்க
20.		01	திரு. ஈ.ஜி. டிங்கிரி பண்டா	தெல்கொட

கதிர்காம யாத்திரை விடுதியின் வருமானம் மற்றும் செலவு விபரங்கள் - 2020

மாதம்	ஒதுக்கப்பட்ட அறைகளின் அளவு	வருமானம் ரூபா.	செலவுகள்	
			நீர்ப் பட்டியல் ரூபா.	மின்சாரப் பட்டியல் ரூபா.
ஜனவரி	03 (1 நாள்)	4,500.00	2,966.70	7,275.60
பெப்ரவரி	13 (1 நாள்)	19,500.00	4,815.00	9,549.72
மார்ச்	07 (17 நாட்கள்)	178,500.00	6,352.00	-
ஏப்ரல்	-	-	1,338.00	1,771.20
மே	-	-	-	7,479.00
யூன்	-	-	3,003.30	12,031.20
யூலை	08 (1 நாள்)	12,000.00	3,954.90	7,829.94
ஆகஸ்டு	04 (1 நாள்)	6,000.00	2,381.10	9,547.20
செப்தெம்பர்	-	-	5,931.30	-
ஒக்டோபர்	-	-	1,960.20	7,358.40
நவம்பர்	-	-	660.90	4,023
டிசம்பர்	-	-	532.80	3,862.80
மொத்தம்	**35**	**220,500.00**	**33,896.20**	**70,728.06**

முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

2000 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையானது நீதிமன்றச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தலைவர் உட்பட உறுப்பினர்கள் ஐந்து பேர்களைக் கொண்டு செயற்படுவதாகும். இதன் தற்போதைய தலைவர் ஓய்வூபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியாவர்.

இதன் பணியாவது, பிள்ளைகள் மூலம் கவனிக்கப்படாத, 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிப பெற்றோர்களுக்கு அந்த கவனிக்காத பிள்ளைகளிடம் இருந்து வாழ்வதற்கு ஏதும் பராமரிப்பு பணம் பெற்றுக்கொடுப்பதாகும். அதன் பிரகாரம் இந்த பிள்ளைகள் மூலம் கவனிக்கப்படாத பெற்றோர்களால் சபைக்கு முறைப்பாடு செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில், சபையினால் முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் இரண்டு தரப்பினர்களையும் அழைத்து விசாரிக்கப்படுகிறது. பெற்றோர்களின் வருமானம் மற்றும் தங்கியிருப்பதற்கான தேவை ஆகியவை கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இங்கு பெற்றோர்களுக்கு பராமரிப்பு பணம் கோரப்படும் பொழுது தமது பிள்ளைகளிடத்திலும் தமது வளர்ப்பு பிள்ளைகளாக வளர்த்த பிள்ளைகளிடத்திலும் (Adoped Child) பராமரிப்பு பணம் கோர முடியும். மேலும் ஏதேனும் பெற்றோரின் வயது 60 க்கு குறைவாக இருக்கும் நிலையில் அவர்களின் அன்றாட பராமரிப்புக்களை செய்துகொள்ள முடியாத உடல் அங்கவீனமுற்றவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் 24 (I) ஆம் பிரிவின் கீழ் பராமரிப்பு பணம் கோர முடியும்.

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தேவையான விண்ணப்பம் பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தரிடமும் பிரதேச செயலாளர் அலுவலகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சபைக்கு குடும்ப பிணக்குகள், காணிப் பிணக்குகள் அல்லது சொத்து சம்பந்தமாக குடும்பங்களுக்கிடையிலுள்ள பிணக்குகள் போன்றவைகளை தீர்த்து வைக்கும் அதிகாரம் இந்தச் சட்டத்தின் கீழ் இல்லை.

இந்த பராமரிப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் பராமரிப்புப் பணம் செலுத்துதல் சம்பந்தமான உத்தரவு ஒன்றை ஏதும் பிள்ளையினால் செய்யாதிருக்கும்போது சட்டத்தின் 32 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு அந்த தீர்மானத்தை அமுற்படுத்துவதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு சாட்ட முடியும். அதன்போது நீதவானுக்கு அந்த உத்தரவை பராமரிப்பு கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட கட்டளை ஒன்றை செயற்படுத்தும் விதத்தில் அமுற்படுத்தும் அதிகாரம் உண்டு.

முதியோர்களுக்கான பராமரிப்பு சபை - 2020

2020 ஆம் வருடத்தில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் - 78

சபையினால் தீர்த்து வைக்கப்பட்ட முறைப்பாடுகள் - 22

தற்சமயம் விசாரிக்கப்பட்ட வண்ணமுள்ள முறைப்பாடுகள் - 48

நடாத்தப்பட்ட சபை அமர்வுகளின் எண்ணிக்கை - 24

செலவான தொகை ரூபா. - 1,239,985/-

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை உறுப்பினர்கள்

- **திரு. டட்லி அபேசிறி கருணாரத்ன - தவிசாளர்**
- **திரு. எம்.ஜீ. புஞ்சிபண்டா -- செயலாளர்**

சபையின் உறுப்பினர்கள்

1. **திரு. கலாநிதி லீல் குணசேகர**
2. **விசேட வைத்திய நிபுணர்-திரு. ஹிலரி குரே**
3. **திருமதி. கீதா த பொன்சேகா.**
4. **திருமதி. ரம்யா சூரியஆரச்சி**

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலவர அறிக்கை

	குறிப்பு	2020 ரூபா.	2019 ரூபா.
வருமானம்			
நடப்பு அல்லாத சொத்துக்கள்			
சொத்து,தொழிற்சலை மற்றும் உபகரணங்கள்	02	98,191,550.40	101,886,935.08
நடைமுறைச் சொத்துக்கள்			
முதலீடு	03	2,019,776,871.21	1,708,227,066.89
ஊழியர் சபைக் கடன்	04	6,933,113.00	6,526,199.00
ஊழியர் சபை முற்பணம்	05	45,950.00	80,362.76
சரக்குப் பொருட்கள்	06	883,334.76	618,843.95
திரண்ட நிதியம்	07	43,070,116.52	40,371,631.46
பணமும் பணச் சமநிலைகளும்	08	406,082,997.50	201,178,630.79
மொத்தத் நடைமுறைச் சொத்துக்கள்		**2,476,792,382.99**	**1,957,002,734.85**
மொத்த சொத்துக்கள்		**2,574,983,933,39**	**2,058,889,669.93**
நிகரச் சொத்துக்கள்			
அரச திரண்ட மூலதனம் (அரச நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மூலதனம்)	09	38,236,465.22	46,311,747.80
மூலதன மானியம்	10	80,261,400.00	82,254,800.00
மீள் மதிப்பீட்டு இருப்பு	11	324,615.28	(6,701,884.72)
திரண்ட மேலதிகம்/பற்றாக்குறை	12	(35,186,151.44)	(26,262,035.37)
மொத்த பொறுப்புக்கள்		**83,636,329.06**	**95,602,627.71**
பொறுப்புக்கள்			
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
பணிக்கொடைகள்	13	29,141,217.50	23,568,970.50
ஊழியர் கடன் நிதி	14	1,951,624.58	1,398,017.85
முதியோர் பாதுகாப்பு நிதியம்	15	2,446,938,177.47	1,931,745,249.19
முதியோர் தாபரிப்பு நிதி	16	26,984.35	70,984.35
நிகரச் சொத்துக்கள்		**2,478,058,003.90**	**1,956,783,221.89**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
திரண்ட செலவு	17	9,165,308.20	1,000,909.57
சாதாரண வைப்புகள்	18	3,572,292.23	1,870,431.91
ஒதுக்கீடுகள் மற்றும் இதர கொடுப்பனவுகள்	19	552,000.00	1,017,400.00
கடந்த வருடத்தின் கூடுதல் கட்டணம்			2,615,078.85
முழு நடைமுறைப் பொறுப்புக்கள்		**13,289,600.43**	**6,503,820.33**
மொத்தத் தேறிய சொத்துக்கள்		**2,574,983,933.39**	**2,058,889,669.93**

இந்த நிதிநிலவர அறிக்கைகள் இலங்கையின் அரச பிரிவின் கணக்கியல் தர நிர்ணயத்தின்படி தயாரிக்கப்படுகின்றன.

80 முதல் 83 ஆம் பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் 84 முதல் 94 ஆம் பக்கங்களில் உள்ள குறிப்புகள் இந்த நிதி நிலவர அறிக்கைகளின் கட்டாய அங்கமாகும். இந்த நிதி நிலவர அறிக்கையைத் தயாரித்து வழங்குவது தொடர்பில் சபையின் உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

வைத்தியர்.எஸ்.எச்.முனசிங்ஹ
செயலாளர்
சுகாதார அமைச்சு

சந்தன ரணவீர ஆரச்சி
சமூக சேவைகள் பணிப்பாளர்
(ப.க.) முதியோர்களுக்கான தேசிய

செயலகம்
தவிசாளர்
முதியோர்களுக்கான தேசிய சபை

முதியோர்களுக்கான தேசிய செயலகம்
2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்தின் நிதி செயற்திறன் அறிக்கை

	குறிப்பு	2020 ரூபா.	2019 ரூபா.
வருமானம்			
இலங்கை அரச வழங்கல்கள்	20	159,695,000.00	138,761,556.00
ஏனைய வருமானம்	21	424,049.18	355,449.33
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்	22	10,068,682.58	11,004,480.84
மொத்த வருமானம்		**170,187,731,.76**	**150,121,486.17**
குறைக்கப்பட்ட : செலவுகள்			
முதியோர் பயனாளிகளுக்கான நிகழ்ச்சிகள்	23	33,694,827.10	52,034,708.32
பணியாளர் செயலவுகள்	24	115,411,313.50	76,112,226.98
சொத்துக்கள், எந்திப்பொறிகள் மற்றும் பொருத்துதல்களைக் உபகரணங்கள் மீதான தேய்மானம்	25	10,721,884.68	11,657,682.94
பிரயாணச் செலவுகள்	26	2,868,681.00	3,069,978.08
வழங்கல்கள்.	27	2,074,562.57	2,412,779.53
பராமரிப்புச் செலவுகள்	28	5,096,336.23	2,733,385.96
ஒப்பந்தச் சேவைகள்	29	11,721,032.85	3,866,157.41
பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாடு		473,395.00	1,096,466.44
மொத்தச் செலவு		**182,062,032.93**	**152,983,385.66**
ஆண்டுக்கான தேறிய அதிகப்படியான / பற்றாக்குறை		**(11,874,301.17)**	**(2,861,899.49)**

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிய இறுதி வருடத்திற்கான நிறைவேற்று அறிக்கையின் மாற்றங்கள்.

விபரங்கள்	மூலதனப் பங்களிப்பு		மூலதன பணிக் கொடை	தேறிய பற்றாக்குறை	ஒட்டு மொத்த அதிகரிப்பு
	மூலதன உச்சம்	மூலதன மானியம்			
2018 டிசம்பர் 31 ஆம் திகதிய இருப்பு	**40,778,420.08**	**11,590,875.00**	**84,248,200.00**	**(4,892,549.83)**	**(17,007,024.88)**
முன்னைய வருட சீர்படுத்தல்	-	-	-	(3,439,772.89)	(6,393,111.00)
வருடத்திற்குள் சீர்படுத்தல்	(3,642,422.28)	(2,415,125.00)	(1,993,400.00)	1,630,438.00	-
வருடத்திற்கான அதிகரிப்பு/ பற்றாக்குறை	-	-	-	-	(2,861,899.49)
2019 ஆம் வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிய மீதி	**37,135,997.80**	**9,175,750.00**	**82,254,800.00**	**(6,701,884.72)**	**(26,262,035.37)**
முன்னைய வருட சீர்படுத்தல்	-	-	-	-	(427,500.00)
வருடத்திற்குள் சீர் செய்தல்	(5,110,157.58)	(2,965,125.00)	(1,993,400.00)	7,026,500.00	3,377,685.10
வருடத்திற்கான அதிகரிப்பு/ பற்றாக்குறை	-	-	-	-	(11,874,301.17)
2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அம் திகதிய மீதி	**32,025,840.22**	**6,210,625.00**	**80,261,400.00**	**324,615.28**	**(35,186,151.44)**

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிதிப்பாய்ச்சல் கூற்று

செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாக நிதியப் பாய்ச்சல்.	**2020 ரூபா.**	**2019 மீளாய்வு**
செயற்பாட்டு நடவடிக்கைகள் மேலதிகம் / பற்றாக்குறை	**(11,874,301.17)**	**(2,861,899.49)**
நிதிசாரா செயற்பாடுகள்		
தேறிய வருமானம்	(10,068,682.58)	(11,004,480.84)
சொத்துக்கள், எந்திரிப்பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மானம்.	10,721,884.68	11,657,682.94
ஒதுக்கீடுகள் / பணிக்கொடை (பாய்ச்சல்)	5,886,467.00	4,857,921.00
மறுமதிப்பு இருப்பு	-	1,630,438.00
முன்னைய வருடத்தின் இணக்கம்	(427,500.00)	(9,832,884.39)
ஆண்டிற்கான இணக்கம் (கடந்த ஆண்டின் பற்றுச் சீட்டு)	**3,377,685.10**	**-**
நிகர பண வரவு / (வெளிச் செல்லும்) மூலதன மாற்றங்களுக்கு முன்	**(2,384,446.97)**	**(5,553,222.78)**
முதலீட்டு அதிகரிப்பு/(குறைதல்) (நிலையான வைப்பு)	(311,549,804.32)	**(223,628,023.50)**
சரக்குப் பொருள் அதிகரிப்பு/(குறைதல்)	(264,490.81)	163,083.39
ஊழியர் கடன் நிதி அதிகரித்தல் /(குறைதல்)	(406,914.00)	(76,412.00)
ஊழியர் சபை முற்பணம் அதிகரிப்பு/(குறைதல்)	34,412.76	194,097.24
பிற றெதல்களின் அதிகரிப்பு / (குறைதல்)	(2,698,485.06)	(33,551,020.46)
ஒதுக்கீடுகள் மற்றும் பிற கொடுப்பனவுகளின் அதிகரிப்பு / (குறைதல்)	(465,400.00)	(42,090.00)
ஊழியர் கடன் நிதி அதிகரித்தல்	553,606.73	261,690.22
பொது வைப்புக்களின் அதிகரிப்பு / (குறைதல்)	1,701,860.32	62,500.00
திரண்ட செலவுகளின் அதிகரிப்பு / (குறைதல்)	8,164,398.63	(288,333.46)
கடந்த வருடத்தின் கூடுதல் கட்டணத்தின் அதிகரிப்பு (குறைதல்)	(2,615,078.85)	222,570.85
செயல்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட நிகர பணப்புழக்கம் / (வெளிச்செல்லும்)	**(309,930,341.57)**	**(262,235,160.50)**
பணிக்கொடை /நன்கொடை வழங்குதல்	(314,220.00)	(413,876.00)
செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் நிகர பண வரவுகள் / வெளியேற்றங்கள்	**(310,244,561.57)**	**(262,649,036.50)**
முதலீட்டு நடவடிக்கைகளில் பணப்புழக்கம்		
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் கொள்முதல்	-	(4,248,249.71)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர பண வரவு / (வெளியேற்றம்)	**-**	**(4,248,249.71)**
நிதிசார் செயற்பாடுகளினூடான காசுப் பாய்ச்சல்		
அரச வழங்கல் (மூலதனம்)	-	2,953,533.56
முதியோர் தாபரிப்புத் திட்டம்	(44,000.00)	(59,000.00)
முதியோர் பாதுகாப்பு நிதி	515,192,928.28	411,312,307.74
நிதிசார் செயற்பாடுகளினூடான தேறிய காசுப் பாய்ச்சல்	**515,148,928.28**	**414,206,841.30**
நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சலின் தேறல் அதிகரித்தல் (குறைதல்)	204,904,366.71	147,309,555.09
காலப்பகுதி ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல்	201,178,630.79	53,869,075.70
வருட இறுதியிலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல்	**406,082,997.50**	**201,178,630.79**
நிதி மற்றும் நிதிசார் ஒப்பீடு		
நிதி மற்றும் நிதி இணக்கம்.	**406,082,997.50**	**201,178,630.79**

முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலவர அறிக்கைகள் தொடர்பான குறிப்புக்கள்.

1. அமைவிடமும், சட்ட அடிப்படையும்.

முதியோர்களுக்கான தேசிய செயலகம் தாபிக்கப்பட்டிருப்பது 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கத்தையுடைய சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2000 ஆம் இலக்க 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழாகும். அதற்கமைய முதியோர்களுக்கான தேசிய செயலகம் சட்ட ரீதியான நிறுவனம் ஒன்றாக உறுவாக்கப்பட்டுள்ளது. முதியோர்களுக்கான தேசிய செயலக (NSE) தலைமை அலுவலகம் மற்றும் பிரதான சேவை வழங்கள் நிறுவனம் அமைந்திருப்பது, இலங்கையின் பத்தரமுல்லை பிரதேசத்தில் செத்சிறிபாயவின் கட்டம் 2 இன், இரண்டாம் மாடியில் D எனும் கட்டிடப் பிரிவிலாகும்.

1.1 பிரதான செயற்பாடுகளும் வழிநடாத்தலின் தன்மைகளும்.

முதியோர்களுக்கான தேசிய செயலகம் என்பது இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் குழாமின் நலன்கள் தொடர்பான திட்டங்களைச் செயற்படுத்தலின் முதன்மையானதும் தேசிய மட்ட நிர்வாகத்தைக் கொண்ட அரச நிறுவனமும் ஒன்றாகும்.

1.2 தயாரிப்புச செய்வதற்கான அடிப்படை

1.2.1 இணக்க அறிக்கை

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பது நிதி செயல்திறன் அறிக்கை, நிதி நிலவர அறிக்கை, நிதிப் பாய்ச்சல் மாற்ற அறிக்கை, பணப் புழக்க அறிக்கை மற்றும் நிதி அறிக்கை ஆகியவைகளாகும். இந்த நிதி நிலவர அறிக்கைகள் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம் (ICASL) மற்றும் நிதி அமைச்சுடன் ஒன்றிணைந்த இலங்கை பொதுத் துறை கணக்கியல் தர நிர்ணயம் (SLPSAS) மற்றும் 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கத்தினையுடைய முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் IV ஆம் பகுதியில் - காணப்படும் தேவைகளுக்கு அமைவாகும்.

1.2.2 அளவீட்டின் அடிப்படை

